7th November 1957]

THE HON SRI R. VENKATARAMAN : இந்த மூன்று கேள்விகளும் ஸில்க் அதிகமாக உற்பத்தி செய்வதைப்பற்றியது. அதற்கான புள்ளிவிவரங்கள்தான் என்னிடம் இருக்கின்றன. நூல் விஷயமாக பதில் வேண்டுமானால் தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : நமது ராஜ்யத்திலேயே இருந்த, பட்டுத் துணிகளை உற்பத்தி செய்யும் மில்லாகிய ஸௌத் இண்டியன் ஸில்க் மில்—குடியாத்தத்தில் இருந்தது—1952-ல் மூடப்பட்டது. அதை சர்க்காராவது எடுத்து நடத்துவதற்கு முயற்சி செய்யுமா ?

MR. SPEAKER : மூலக் கேள்விக்கும் நீங்கள் போடும் கேள்விக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ? நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை. I rule this question out of order.

Complaint against the Trustee of Sri Vanamamalai Math, Nanguneri.

* 110 *Q*.—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any complaints against the trustee of Sri Vanamamalai Math and temple at Nanguneri, in respect of the properties of the Math and temple, were received either by the Hon. the Minister or by the Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments, Tanjore;

(*b*) whether any enquiry was conducted by the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments, Tirunelveli;

(*c*) whether any report was submitted after such enquiry;

(*d*) whether the Assistant Commissioner has suggested framing of any scheme for the temple or filing of a suit in respect of the Math; and

(*e*) the action proposed to be taken in respect of the management of the Math and temple?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*e*) Petitions have been received and a report has been called for from the Commissioner, Hindu Religious and Charitable Endowments. His report is awaited.

SRI A. V. P. ASAITHAMBI : இதைப்போல் பல மடங்களில் ஊழல்கள் இருப்பதாக சர்க்காருக்கு ரிப்போர்ட் வந்திருப்பது உண்மையா ? அப்படியானால் அவைகளின் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பாக ரிப்போர்ட் எதுவும் வந்ததாகக் கூறமுடியாது. எந்த தர்ம ஸ்தாபனத்திலும், எந்த மடத்திலும், ஊழல்கள் இருந்தாலும், சட்டம் கொடுக்கும் அதிகாரங்களையெல்லாம் பிரயோகித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் ; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : Questions are over.